வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 19.3.2026 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

இந்தியா, சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாச்சார ரீதியில் மறுமலர்ச்சி கண்டு வருவதாக, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார்.

நாட்டில், பிஎன்ஜி மற்றும், சிஎன்ஜி எரிவாயு விநியோகம், 100 சதவிகித அளவில் நடப்பதாக, மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மேற்கு ஆசிய நிலவரங்களால் பாதிக்கப்பட்ட இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு, மத்திய அரசு, ஆதரவு திட்டம் ஒன்றை அறிவித்துள்ளது.

நாட்டில் பாதுகாப்புத் துறையின் முக்கிய தூணாக, சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மேம்பட்டு வருவதாக, பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறி உள்ளார்.

## முர்மு

இந்தியா, சமூக, பொருளாதார அரசியல் மற்றும் கலாச்சார ரீதியில் மறுமலர்ச்சி கண்டு வருவதாகவும் அயோத்தி ராமர் கோவில் இதன் சின்னமாகவே திகழ்வதாகவும், குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார். இன்று அயோத்தி ராமர் கோவிலில் தரிசனம் செய்த அவர் பின்னர் கூட்டம் ஒன்றில் பேசுகையில் இவ்வாறு கூறினார். காஞ்சி காமகோடி பீடத்தால் வழங்கப்பட்ட ஸ்ரீராமர் யந்திரத்தை கோவில் வளாகத்தில் பிரதிஷ்டை செய்யும் விழாவிலும் குடியரசு தலைவர் கலந்து கொண்டார். உலகின் முதல் நிலைக்கு இந்தியாவை உயர்த்த, புனிதமான இத்தருணத்தில் அனைவரும் உறுதியேற்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். உத்தரபிரதேஷ் முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், ஆன்மிக தலைவர் மாதா அமிர்தானந்தமயி மற்றும் சாதுக்கள் பலரும் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

## மோடி-வாழ்த்து

இன்று யுகாதி, குடி படவா, நவரேஹ் மற்றும் சேத்தி சந்த் பண்டிகைகள் கொண்டாடப்படுவதை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். பண்டிகை கொண்டாட்டங்களால், அனைத்து மக்களின் வாழ்விலும் மகிழ்ச்சி, வளம், ஆரோக்கியம் மற்றும் நல்ல எதிர்காலம் வந்து சேரட்டும் என தாம்

வாழ்த்துவதாக சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில் பிரதமர் கூறி உள்ளார். புத்தாண்டை குறிக்கும் இப்பண்டிகைகள் புதிய நம்பிக்கை மற்றும் புதிய சாத்தியங்களுடன் மேலும் முன்னேறிச் செல்ல அனைவருக்கும் உணர்வூக்கம் அளிக்கும் என தாம் நம்புவதாகவும் பிரதமர் கூறி உள்ளார்.

*மேற்கு ஆசியா*

நாட்டில், வீட்டு உபயோகத்திற்கான பிஎன்ஜி மற்றும், போக்குவரத்து தேவைகளுக்கான சிஎன்ஜி விநியோகம் 100 சதவிகிதம் நடப்பதை, அரசு உறுதிப்படுத்தி இருப்பதாக பெட்ரோலியத் துறை இணை செயலர் திருமதி சுஜாதா சர்மா தெரிவித்துள்ளார். மேற்காசிய நிலவரங்கள் குறித்து இன்று புதுடெல்லியில், சம்பந்தப்பட்ட பல்வேறு அமைச்சகங்கள் இணைந்து நடத்திய செய்தியாளர் கூட்டத்தில் அவர் இதை தெரிவித்தார்.

கடந்த 2 வாரங்களில் வீட்டு உபயோகம் மற்றும் வர்த்தக பயன்பாட்டிற்கான 1 லட்சத்து 25 ஆயிரம் எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக திருமதி சர்மா கூறினார். கடந்த 3 நாட்களில் 5 ஆயிரத்து 600 எல்பிஜி வாடிக்கையாளர்கள், பிஎன்ஜிக்கு மாறி இருப்பதாக அவர் தெரிவித்தார்.

பிஎன்ஜி விநியோக கட்டமைப்புகளின் விரிவாக்கத்திற்கு ஒத்துழைப்பு அளிக்கவும் எல்பிஜி பதுக்கல் மற்றும் கள்ளச் சந்தை

விற்பனையை தடுக்கவும், மாநில அரசுகளை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளதாக திருமதி சர்மா தெரிவித்தார். ஆன்-லைன் மூலமான எல்பிஜி பதிவுகளின் எண்ணிக்கை 94 சதவிகிதம் அதிகரித்து இருப்பதாகவும் பீதி அடிப்படையிலான பதிவுகளின் எண்ணிக்கை குறைந்து இருப்பதாகவும் அவர் கூறினார்.. எல்பிஜி நிலவரம் சற்று கவலை அளிப்பதாகவே உள்ள போதிலும் கையிருப்பு முற்றிலுமாக தீரும் அபாயம் இல்லை என்று அவர் குறிப்பிட்டார்.

வளைகுடா பகுதிகளுக்கான வெளியுறவு அமைச்சகத்தின் இணை செயலர் திரு அசீம் மகாஜன் இந்த செய்தியாளர் கூட்டத்தில் பேசுகையில் இந்தியாவிற்கும் ஐக்கிய அரபு எமிரேட்டுக்கும் இடையே தேவை மற்றும் பாதுகாப்பு நிலவரங்களுக்கு ஏற்ப குறைந்த எண்ணிக்கையில் விமானங்கள் இயக்கப்படுவதாக தெரிவித்தார். குவைத், பஹ்ரைன் மற்றும் ஈராக்கில் இருந்து விமானங்களை இயக்க கட்டுபாடுகள் இருப்பதால் அவசர தேவை உள்ள இந்தியர்களை சவுதி அரேபியா வழியாக இந்தியாவிற்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதாக அவர் கூறினார். SafeSea-Vishnu கப்பலில் இருந்து பத்திரமாக மீட்கப்பட்ட இந்திய ஊழியர்கள் விரைவில் தாயகம் திரும்புவார்கள் என்றும் அவர் தெரிவித்தார். ஹோர்முஸ் ஜலசந்தி உட்பட பாரசீக வளைகுடாவில் உள்ள

எல்லா இந்திய கப்பல்களும் பாதுகாப்பாகவே உள்ளதாக கப்பல் துறை சிறப்பு செயலர் திரு ஆர் கே சின்ஹா கூறினார்.

கடந்த 24 மணி நேரத்தில் அரசு உட்பட சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பினரின் ஒருங்கிணைந்த முயற்சிகள் மூலம் 16 இந்திய கப்பல்கள் தாயகம் திரும்பி இருப்பதாக அவர் தெரிவித்தார். குஜராத், மகாராஷ்டிரா,கேரளா, ஆந்திரா மற்றும் புதுச்சேரியில் உள்ள துறைமுகங்களுடன் கப்பல் துறை அமைச்சகம் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருவதாகவும் இத்துறைமுகங்களில் இருந்து எதிர்மறை தகவல்கள் எதுவும் இல்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஏற்றுமதி

மேற்கு ஆசிய பிணக்குகளால் பாதிக்கப்பட்ட இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு உதவ, மத்திய அரசு ரிலீஃப் என்ற பெயரில் ஆதரவு திட்டம் ஒன்றை அறிவித்துள்ளது. வெளிவர்த்தக துறை தலைமை இயக்குநர் திரு லுவ் அகர்வால் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் இதை தெரிவித்தார். கடந்த பிப்ரவரி முதல் மார்ச் 20-வரை இந்தியாவில் இருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்பப்பட்ட சரக்குகள் மற்றும் மத்திய கிழக்கு பிராந்தியம் வழியாக இதர நாடுகளுக்கு அனுப்பப்பட்ட சரக்குகளுக்கு புதிய திட்டத்தின் கீழ் கூடுதல் பிரிமியம் இன்றி நூறு சதவித காப்பீட்டு வசதி வழங்கப்படும்

என்றும் இதற்கான கூடுதல் செலவுகளை அரசே ஏற்கும் என்றும் அவர் தெரிவித்தார். குறிப்பாக சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் இதனால் பயன் பெறும் என்றும் பொருள் விநியோகச் சங்கிலியில் தொடர்ச்சியை பராமரிக்க இத்திட்டத்தினால் ஏதுவாகும் என்றும் அவர் கூறினார்.

வர்த்தக துறை செயலர் திரு ராஜேஷ் அகர்வால் இந்த செய்தியாளர் கூட்டத்தில் பேசுகையில் இந்திய ஏற்றுமதியாளர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண அமைச்சகங்களுக்கு இடையிலான குழு அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். ஏற்றுமதியாளர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதில், சம்பந்தப்பட்ட அமைச்சகங்களும் வெளிநாடுகளில் உள்ள இந்திய தூதரகங்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.

*ராஜ்நாத்*

நாட்டில் பாதுகாப்புத் துறையின் முக்கிய தூணாக, சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மேம்பட்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில் பாதுகாப்பு உற்பத்தி நிறுவனங்களுக்கு இடையிலான தேசிய மாநாட்டில் அவர் பேசுகையில் இந்தியாவில் சிறு-குற மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் செயற்கை நுண்ணறிவு, ரோபோட்டிக்ஸ் உள்ளிட்ட நவீன

துறைகளில் செயல்பட்டு வருவதையும் நாட்டின் தொழில் நுட்பத் திறன்களை மேம்படுத்துவதில் உள்ளுர் அளவிலான தொழில் முனைவோர் மற்றும் புதுமை படைப்பாளிகள் முக்கிய பங்காற்றி வருவதையும் சுட்டிக்காட்டினார். நவீன தொழில் நுட்பத் துறைகளில் ஸ்டார்ட்-அப் நிறுவனங்களுக்கும் ஆராய்ச்சி அமைப்புகளுக்கும் இடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்த தனி திட்டம் ஒன்றை அரசு செயல்படுத்தி வருவதாக பாதுகாப்பு அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

*மின்சாரம்*

உலகின் பல நாடுகளைக் காட்டிலும் இந்தியாவில் தான் மின்சாரக் கட்டணம் குறைவு என்று மத்திய மின்துறை அமைச்சர் திரு மனோகர்லால் கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில் பாரத் எலக்டிரிசிட்டி மாநாட்டின் தொடக்க அமர்வில் உரையாற்றிய அவர் எதிர்கால செயல்திட்டங்களுக்கான ஆதாரமாகவே மின்சாரம் திகழ்வதால் அனைவரும் வாங்க கூடிய விலையில் மின்சாரம் வழங்குதல் அவசியம் என்றார். இந்தியாவில் கடந்த 10 ஆண்டுகளில் 2.09 லட்சம் சர்க்யூட் கிலோ மீட்டர் அளவிற்கு புதிய மின் விநியோகப் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். பிரதமர் திரு நரேந்திர மோடி பாரத் மின்சார உச்சி மாநாட்டிற்கு அனுப்பி உள்ள கடிதத்தில் இந்தியாவில் புதைபடிவ எரிபொருள் அல்லாத எரிசக்தி ஆதாரங்கள்

மூலமான மின்சார் உற்பத்தி திறன், ஏற்கனவே, மொத்த திறனில் 50 சதவிகிதமாக அதிகரித்து இருப்பதாக தெரிவித்தார். மின்சாரம் தொடர்பான அனைத்து துறையினரையும் ஒரே மேடையில் ஒருங்கிணைக்கும் வகையிலான இம்மாநாடு, 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை எட்டுவதில், பெருமளவு உதவும் என்றும் பிரதமர் கூறி உள்ளார்.

வேட்பு மனு

காரைக்காலில் திருநள்ளாறு சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட காங்கிரஸ் கட்சியின் முன்னாள் அமைச்சர் திரு கமலக் கண்ணன் இன்று வேட்பு மனு தாக்கல் செய்தார். ஏனாம் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினர் திரு கொல்லப்பள்ளி ஸ்ரீநிவாஸ் அசோக் வேட்பு மனு தாக்கல் செய்தார். புதுச்சேரி சட்டமன்ற தேர்தலில் போட்டியிட மற்றவர்கள் குறித்து விவரங்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.

முதியோர் ஓட்டு

முதியோர், மாற்றுத் திறனாளிகள், சேவை வாக்காளர்கள் மற்றும் தேர்தல் பணியாளர்கள் அஞ்சல் ஓட்டு மூலம் தேர்தலில் வாக்களிக்க தேவையான வசதிகளை தேர்தல் ஆணையம் வழங்கி வருகிறது. 85 வயதிற்கு மேற்பட்ட முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் 12-டி படிவத்தை பூர்த்தி செய்து, வாக்குச் சாவடி நிலை அதிகாரி மூலம் தேர்தல்

நடத்தும் அதிகாரியிடம் சமர்ப்பிக்கலாம் என்றும், வாக்குப் பதிவுக் குழுவினர், சம்பந்தப்பட்ட வாக்காளர்களின் வீட்டிற்கே வந்து வாக்குச் சீட்டுகளை சேகரித்துக் கொள்வார்கள் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. வாக்குப் பதிவு நாளன்று அத்தியாவசியப் பணியில் ஈடுபட்டுள்ள தத்தம் துறையின் நோடல் அதிகாரி மூலம் தபால் ஓட்டு வசதியை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும், சேவை வாக்காளர்கள், மின்னணு தபால் ஓட்டு முறை மூலம் தங்களின் தபால் ஓட்டுக்களை சமர்ப்பிக்கலாம் என்றும் ஆணையம் தெரிவித்துள்ளது. தபால் ஓட்டுக்கள், வாக்கு எண்ணிக்கை நாளான மே 4-ஆம் தேதி காலை 8 மணிக்குள் சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அதிகாரிகளை சென்றடைய வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து மாற்றம்

புதுச்சேரியில் காமராஜர் சாலையில் உள்ள பழைய உப்பனாறு குறுக்கு பாலம் இடித்து மறுகட்டமைப்பு செய்யப்படுவதை ஒட்டி இன்று முதல் தற்காலிக போக்குவரத்து மாற்றங்கள் அறிவிக்கப் பட்டுள்ளது. ராஜா திரையரங்கில் இருந்து மேற்குநோக்கி காமராஜர் சாலையில் வரும் நடுத்தர மற்றும் இலகு ரக வாகனங்கள், வள்ளலார் சாலை-45 அடி சாலை-சாரம் அவ்வை திடல் வழியாக மீண்டும் காமராஜர் சாலையை அடையலாம் என்றும் கனரக மற்றும் நடுத்தர வாகனங்கள் அஜந்தா

சந்திப்பில் இருந்து சர்தார் பட்டேல் சாலையில், செஞ்சி சாலை,- சோனாம்பாளையம்-எம்எம் சாலை வழியாகவே நகரப் பகுதிகளை அடைய வேண்டும் என்றும் போக்குவரத்து காவல் துறை உத்தரவிட்டுள்ளது. வள்ளலார் சாலையிலும் காமராஜர் சாலையில் ராஜா திரையரங்கில் இருந்தும் ஜிஆர்டி நோக்கி, கனரக, நடுத்தர மற்றும் இலகு ரக வாகனங்கள் அனுமதிக்கப்பட மாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மோதல்-மறுப்பு

இந்தியாவும், ஈரானும், நேருக்கு நேர் மோதும் நிலைக்கு வந்திருப்பதாக சமூக ஊடகத்தில் வெளியாகும் தகவலை மத்திய வெளியுறவு அமைச்சகத்தின் உண்மை அறியும் பிரிவு மறுத்துள்ளது. இத்தகவல் போலியானது என்றும் ஆதாரமற்ற இத்தகைய செய்திகள் குறித்து மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றும் உண்மை அறியும் பிரிவு கூறி உள்ளது. ஹோர்முஸ் நீரிணை வழியாக பயணிக்க 22 இந்திய கப்பல்களுக்கு, ஈரான் அனுமதி மறுத்திருப்பதாக கூறப்படுவதையும் வெளியுறவு அமைச்சகம் மறுத்துள்ளது.

வானிலை

இன்று தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும் திருச்சி, அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களில் கன மழைக்கு வாய்ப்பு

இருப்பதாகவும், சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. புதுச்சேரி, காரைக்கால் பகுதியை பொறுத்த வரை நாளை மிதமான மழையும், நாளை மறுநாள் லேசான மழையும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக சென்னை, பள்ளிக்கரணை, ஈரோடு மாவட்டம் வறட்டுப் பள்ளம் ஆகிய இடங்களில் தலா 10 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது. பாகூர் மற்றும் காரைக்காலில் தலா 3 சென்டிமீட்டர் மழை பெய்துள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

இந்தியா, சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாச்சார ரீதியில் மறுமலர்ச்சி கண்டு வருவதாக, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார்.

நாட்டில், பிஎன்ஜி மற்றும், சிஎன்ஜி எரிவாயு விநியோகம், 100 சதவிகித அளவில் நடப்பதாக, மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மேற்கு ஆசிய நிலவரங்களால் பாதிக்கப்பட்ட இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு, மத்திய அரசு, ஆதரவு திட்டம் ஒன்றை அறிவித்துள்ளது.

நாட்டில் பாதுகாப்புத் துறையின் முக்கிய தூணாக, சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மேம்பட்டு வருவதாக, பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறி உள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு செய்கிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 19.3.2026/Script..

----------------------------------------------------------------------------------------------------------